MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

ஐங்குறுநூற்றில் தலைவி கூற்றும் சூழலும் மனவெளிப்பாடும்

முனைவர் ம. ஆனந்தன்
உதவிப் பேராசிரியர்,
அறிவியல் மற்றும் இதர மானுடவியல் துறைகள் -
நேரு பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரி
கோவை- 7214

The context and expression of the heroine's statement in the Aingurunuru

Dr.M.ANANDAN
Assistant professor
Science and Humanities Dept- Tamil
Nehru Institute of Engineering and Technology-7214

Abstract:

The Aingurunura is the third of the eight volumes of books composed by Sangam poets and compiled by scholars. There are many innovations to be found in this book. All its verses contain an equal number of verses, each hundred being divided into ten verses. The Aingurunuru is also considered a book that chronicles the civilization and customs of the Tamils. In these five hundred verses, the heroine's statements are seen in many places as speaking to multiple characters. These songs include incidents such as the heroine's expressing her grief over her marriage, lamenting her past, forcing her to marry, expressing her chastity, heart-rending feelings, sending messages, refusing to speak, and making love. This article aims to explain the context, place, time, and expression of emotions found in the heroine's statements by comparing them with the previous ones.

முன்னுரை

சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டுச் சான்றோரால் தொகை செய்யப்பட்ட எட்டுத் தொகை நூல்களுள் மூன்றாவதாக அமைந்த நூல் ஐங்குறுநூறாகும். இந்நூலில் காணும் புதுமைகள் பலவாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இதன் திணைகள் யாவும் சமமான எண்ணிக்கையில் செய்யுள்களைப் பெறல், ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை சேமமுறு செப்புகின்று நூலாகவும் ஐங்குறுநூறு விளங்குகின்றது.

இத்தகைய ஐங்குறுநூற்றில் தலைவியின் கூற்றுகள் பல இடங்களில் பல கதாபாத்திரத்தோடு பேசுவதாக பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களில் தலைவி மணம் இரங்குதல் ஆற்றியிருத்தல், பொழுதுக் கண்டு இரங்கல், திருமண வற்புறுத்தல், கற்பு நிலையைக் கூறல், நெஞ்சோடுக்கிளத்தல், தூது விடுதல், வாயில்மறுத்தல், வாயில் நேர்தல் போன்ற நிகழ்வுகள் காணப்படுகின்றன. தலைவி கூற்றுகளில் காணலாகும் கூற்றுச் சூழல், இடம், காலம், மனவெளிப்பாடு போன்றவற்றை முன்னத்துடன் பொருத்திப் பார்த்து விளக்குவதாது இக்கட்டுரை அமைகின்றது.

கூற்று

ஐங்குறுநூற்றில் தலைவியின் கூற்றுக்கள் மொத்தம் 148 பாடல்களில் இடம் பெற்றுள்ளது. மருதத்திணையில் 39 பாடல்களும், நெய்தல் திணையில் 31 பாடல்களும், குறிஞ்சி திணையில் 20 பாடல்களும், பாலைத் திணையில் பிரிவிடை ஆற்றாமையினை கூறுவதாக 70 பாடல்களும், தலைவனின் பரத்தமை பற்றி 2 பாடல்களும், உடன்போக்கு பற்றி 5 பாடல்களும், முல்லைத் திணையில் பருவம் கண்டு கிழத்தி உரைத்ததில் 10 பாடல்களும் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது .

தலைவியின் பண்பு நலன்கள்

சங்க அகஇலக்கிய மாந்தர்களில் தலைவியின் இடம் முதன்மையானதாகும். அச்சம், நாணம், மடம் ஆகியவை தலைவியின் பண்பு நலன்கள் ஆகும். இதனைத் தொல்காப்பியர்

“அச்சமும் நாணமும் மடனும் முந்துறத்த
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப”

(தொல். பொருள், களவியல். 1045)

என்ற நூற்பாவில் சுட்டுகிறார். மேலும் அடக்கம், அமைதி, நேர்மை ஆகியவை பெற்றவள் பெண் என்பர். இதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

"செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்.
அழியும் அருமையும் பெண் பாலான"
(தொல் பொருள். நூ 1154)

என்ற நூற்பாவில் கூறுகிறார். தலைவியைச் சங்க இலக்கியத்தில் அக மாந்தர்களில் அழகும், குணமும் நிமைந்தவளாகப் படைத்துக் காட்டப்பட்டுள்ளன.

சூழல்

ஐங்குறுநூற்றில் தலைவிக்கு நிகழும் கூற்றுக்களின் சூழல்கள்.

1.தலைவி தன் நெஞ்சோடு புலம்பல்

2. தலைவனிடம் புலம்பல்

3. தோழியிடம் புலம்பல்

4. பிற மாந்தர்களிடம் புலம்பல்

என நான்கு வகையில் காண முடிகிறது.

தலைவி தன் நெஞ்சோடு புலம்பல்

அக இயக்கியங்களில் தலைவனைப் போல் தலைவியும் தன் பிரிவுத்துயரினை நெஞ்சோடு பேசிக் கொள்வதாகவும். பாடல்கள் காணப்படுகின்றன.

பரத்தையரை நீங்கி வந்த தலைமகனை ஏற்றுக்கொள்ளுமாறு வாயில்கள் கூற அதற்கு இணங்கியும், இறங்காமலும், தன்னுடைய ஆற்றாமைக்கு ஆட்பட்டும் தலைவனைத் ஏற்றுக் கொள்ள நினைத்த தலைவி, மேலும் தலைவன் பரத்தையிடமே அன்பு கொள்கிறான் என்பதை தெரிந்து. கொண்டு மனம் வருந்தி தன் நெஞ்சுக்குள்ளே கூறிக் கொள்கிறாள். இதனை,

“கரைசேர் வேழம் கரும்பில் பூக்கும்
துறை கேழ் ஊரன் கொடுமை நன்றுன்
ஆற்கை தில்ல யாமே
தேரங்குதில்ல என் தடமென் தோளே"..

(ஐங்குறுநூறு, பா.எண் - 12)

என்ற இப்பாடலில் தலைவன் பத்தையிரிடமே அன்புகொள்கிறான் எனத் தெரிந்துகொண்ட தலைவி, கரையிலே வளரும் கொறுக்கைக் கரும்பினைப் போலவே வெண்பூக்களைத் தோற்றுவிக்கும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

நீர்த்துறைகளைக் கொண்ட ஊரனின் கொடுமையினைக் நான் மறைத்து வாழ்கின்றேன். என்னுடைய பெரிய மென்மையான தோள்கள் தலைவனின் கொடுமையை மறைக்க இயலாது தோற்று போகின்றன என தன் நெஞ்சுக்குள்ளே தலைவி கூறி புலம்புவதை அறிய முடிகிறது.

'தன்துறை ஊரன் பெண்டிர்
திஞ்சு ஊர் யாமத்தும் துயில் அறியலரே''

(ஐங்குறுநூறு, பா.எண் 13)

பரத்தையர் மனையிலிருந்து தலைவன் வருவது மிகவும் கடினமான செயலாகும். ஏனென்றால் ஊர் மக்கள் தூங்கும் நடுயாமத்திலும் அம்பெண்டிர் விழித்திருப்பர். எனவே அப்பெண்களை திட்டு விலகி வருவது முடியாத செயலாகும். அதாவது இனி தலைவன் வரமாட்டான் என்பதைத் தலைவியிடம் வாயில்கள் கூற, அதற்கு தலைவி பதில் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவி வாயில் மத்தூரைத்தல்.

தலைவன் தலைவியை சந்திக்க தோழியின் ஊதவியை நாடினான். தோழியும் தலைவியை சந்திக்க உதவினாள். காதலரின் தவறுகளைப் பொருட்படுத்த கூடாது என்று தலைவியிடம் தோழி கூறினாள். அதற்கு தலைவி நான் தலைவனை நினைத்த தன் பயனாகத் தன் கைவளை கழன்றன என்று கூறி வாயில் மறுத்துரைத்தாள். இதனை,

''அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும் சீக்கும்
காம்புகண் டன்ன தூம்பு உடை வேழத்துத்
துறைநணி யூரனை உள்ளியென்
இறையே ஏர்வளை நெகிழ்பு ஓடும்மே "

(ஐங்குறுநூறு. பா.எண் 20)

இப்பாடலில் ஆறு சிறிய கால்களையும், அழகிய சிறகுகளையும் உடைய தும்பி நூறு இதழ்களை உடைய தாமமைப் பூவில் இட்ட முட்டைகளை அழிக்கின்ற மூங்கிலைப் போன்று உள்ளே துளையினை உடைய வேழத்தை நீர்த்துறையினை அடுத்துள்ள ஊரனை இடைவிடாது எண்ணியதனால் என்னுடைய முன் கையில் ஒளிபொருந்திய வளையல்கள் கழன்றோடுகின்றன என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். அதாவது அத்தகைய தலைவனுக்காக நீ பரிந்து பேசுவது தனக்கு வியப்பாக இருக்கிறது. என்று தோழியிடம் கூறுவதை அறிய முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இளம்பூரணர் கூறும் தலைவி கூற்றும் மெய்ப்பபடும்

களவுக்காலத்தில் தலைவனும், தலைவியும் சந்தித்து பேசும் இடங்களிலும், பிற இடங்களிலும் தலைவிக்கு கூற்றுக்கள் நிகழும். அவைகளை இளம்பூரணர் எடுத்தியம்புவதை தொல்காப்பியத்தில் காண முடிகிறது. இதனை;

“மறைந்து அவர்காண்டல், தற்காட்டுறுதல்.
நிறைந்த காதலில் சொல் எதிர்மழுங்கல்
வழிபாடு மறுத்தல், மறுத்து எதிர்கோடல்
பழிநீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும், நானுமிகவரினும்”
(தொல் பொருள்.நூ 1057)

எனும் நூற்பாவில் தலைவி மறைந்து நின்று தலைவனைக் காணுதல் தன்னை அவன் காணுமாறு நிற்றல், மிகுந்த காதலால் விடை கூறாது மழுங்குதல், தலைவன் கெஞ்சுவான் போல் நெருங்கிவதை மறுத்தல், மறுத்தப்பின் ஏற்று எதிர் கொள்ளுதல், குற்றமற்ற குறுநகை சிறிது தேற்றுதல் இவை ஆறும் முதல் புணர்ச்சிக்கு முன் நிகழும் என்பர், இளம்பூரணர். தலைவன் கையகப்பட்டப்பின் ‘என் செய்தோம்’ எனக் கலங்குதல், மிசவும் நாணப்படுதல் சிறு பிரிவுக்கும் வருந்துதல் காப்பருமை கூறித் தலைவன் வருவதைத் தடுத்தல், அவன் வந்த போது மறுத்துப் பேசுதல், வெளிப்பட மனவருத்தத்தினைச் சொல்லி வருந்துதல், தலைவன் உறுதி கூறுவதை ஏற்க மறுத்தல், தலைவன் வருகைக்கு மிகவும் அஞ்சி வருந்துதல், தலைவன் பிரிந்தபோது சலங்குதல், அவனைப் பெற்றுக் கூடியவழி மகிழ்தல். அவன் வருகின்றமைக்குத் காவல் மிகுதியால் தடையேற்படுமென, தோழி கூறும் போது பேசுதல், தோழி கூறுவதை ஏற்காது கூறுதல், இவை பன்னிரண்டும் தலைவி தனித்தும் தேழியிடத்தும்.. பேசுவன. புணர்ச்சிக்குப்பின் நிகழ்வன என்பர் இளம்பூரணர்.

தலைவி வெளிப்படுத்தும் திறம்

தலைவி தலைவனுடன் ஒருவருக்கும் தெரியாமல் தனவு மணம் செய்து கொள்ள நினைக்கின்றாள். தன் தாய்க்கு இச்செய்தி தெரிய வேண்டும், என்ன செய்வது என்று தோழிக்கு முதலில் இச்செய்தியைப் புலப்படுத்த எண்ணுகின்றாள். அதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். அதோ பார் மழை தவழும் மலை அண்னாந்து நிற்கின்றது. அந்த மலையில் ஓங்கி வளர்ந்த மூங்கில்கள் கோடைக் காற்றால் ஆடி அசைந்து இசையை எழுப்புகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

பளிங்கு போல் தெரித்த அருவிநீர் விழும் என ஒலித்து பாய்ந்து கீழ்நோக்கி வருகின்றது. அங்கும் கலைமான் கூட்டங்கள் கடிய குரல் எழுப்பிக் களித்து விளையாடுகின்றன. சாரல்களில் மலர்ந்துள்ள பூக்களில் வண்டுகள் இன்னோசையை எழுப்புகின்றன. மரத்திலுள்ள மந்திகள் மருண்டு மருண்டு, பார்க்கின்றன. இந்த சூழ்நிலையில் மயில் ஒன்று தோகையை விரித்து ஆடுகின்றன. அந்த மலை நாட்டிலிருந்து நேற்று ஒருவன் கட்டமைந்த அழகிய வில்லுடன் கூடிய அம்புடனும் இங்கு வந்தான். இப்பக்கமாக அம்பு எய்யப் பெற்ற யானையொன்று வந்ததோ என்று என்னை வினவினான் திணைப் புனத்திலுள்ள நானும் என்னைச் சார்ந்து பெண்களும் அவனைப் பார்க்கத்தான் செய்தோம். அங்கனமிருக்க, இரவில் நான் மட்டிலும் படுக்கையில் நீர் சொரியும் கண்களுடனும் மெலிந்த தோள்களுடனும் இருப்பதற்குக் காரண்ம் என்னவோ? என்று கூறும் வாயிலாக இச்செய்தியைப் புலப்படுத்துகின்றான்.
இதனைக் கபிலர்,

> ''ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்
> கோடை யவ்வளி குழலிசை யாகப்
> பாடின் அருவிப்பணி நீர் இன்னிசை''

இதைக் களிறு தரு மூன்று புணர்ச்சி என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பர். இவ்வாறு பூத்துரு புணர்ச்சியாகவும், புனல் தரு புணர்ச்சியாகவும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பாள் என்பதை அறிய முடிகிறது.

தலைவியின் கரந்தை ஒழுக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தன் கரந்துறையொழுக்கம் அலராகி, அதனால் தலைவிக்கு காவற்கடுமைகள் உண்டாகிவிடும் என்று கருதி சில காலம் அவளை நீங்கியிருப்பான். இவ்வாறு தலைவன் நீங்கியிருத்தலை அகப்பெருள் நூலார் ஒருவழித் தணத்தல் என்றும், தலைவியின் காவற்கடுமைகளை இற்செறிப்பு என்றும் கூறுவர். தலைவன் ஒருவழித்தணத்தல் போது அவன் பிரிவாற்றாமையால் தலைவி தன் உணர்ச்சி இழந்து துன்பத்தினால் நாண்கெட்டு, நிறையழிந்து மயங்கியிருப்பாள். கன்னிப் பெண்களின் பிறை தொழுதலாகிய வழக்கமும் அவளிடம் காணப்பெறாது. பாலும் உண்ணாத நிலையேற்பட்டு உண்ணும் உணவும் குறையும், காதலனுடைய ஆற்றாமையுணர்ச்சியை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

“அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்”

(குறள் 706)

என்று வள்ளுவர் கூறியவாறு புறத்தார்க்குத் தெளிவாக புலனாய்விடும் என்பதை அறிய முடிகிறது.

பொய்யர் எனக் கூறி வாயில் மறுத்த கூற்று

பரத்தையரிடம் இருந்து பிரிந்து வந்த தலைவன், தலைவியிடம் பாணனைத் தூதனுப்பினான். அவன் தலைவியை தெளிவிக்க முயன்று தோற்றான். பின்னர் தலைவனும், பாணனும் இணைந்து வந்து தலைவியைத் தேற்றமுயன்ற போது தலைவி, இருவரும் பொய்யர் என்று கூறி வாயில் மறுத்து கூறினாள். இதனை,

“அம்பனத்து அன்ன யாமை ஏறிச்
செம்பின் அன்ன பார்ப்பு பல துஞ்சும்
யாணர் ஊர! நின்னினும் பாணன்
பொய்யன், பல் சூளினனே”

(ஐங்குறுநூறு-பா.எண் 43)

இதனை இப்பாடல் மூலம் சுட்டுகிறார். மரக் காலை ஒத்த ஆமையின் முதுகின் செம்பினைப் போன்ற செந்நிறம் வாய்ந்த அதன் பார்ப்புகள் ஏறித் துயில்வதற்கு இடனான புது வருவாயை உடைய ஊரின் தலைவனே, நீ பொய்யன் எனில் உனக்குத் துணைபோகும் நின் பாணன் உன்னைவிட பொய் சொல்வதில் வல்லவனாவான் என்று தலைவி கூறுகிறாள். அதாவது தலைவனுடைய பொய்யான மொழிகளாலும், சூளுரைகளாலும் நான் மனம் இரங்க மாட்டேன் என்று தலைவி, தலைவனிடமும் பாணனிடமும் கூறுவதை அறிய முடிகிறது.

வாயில்கள் கேட்க தலைவி கூறுதல்

தலைவன் பரத்தையரோடு புனலாடியமையை அறிந்து கூடிய தலைவியிடம், தலைவன் தன் செயலை மறைத்த பொழுது தலைவி பதில் கூறுகிறாள். இதனை,

"சூதுஆர் குறும் தொடி சூர் அமை நுடக்கத்து
நின் வெம் காதலி தழீஇ நெருநை
ஆடினை என்ப புனலே அலரே

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே"

(ஐங்குறுநூறு-பா.எண் 71)

இப்பாடலின் வாயிலாக சுட்டுகிறார். புரை பொருந்திய சிறிய வளையல்களை அணிந்து, கண்டார்க்கு அச்சமூட்டும்படி நடத்தலையுடைய நின் ஆசைக்குரிய காதலியை இறுகத் தழுவிக் கொண்டு நீ புனலாடி மகிழ்ந்ததை பலரும்கண்டு கூறினார்கள். நீ மகிழ்ந்ததை பற்றி ஊரிலெழுந்த பழிச் சொற்களை மறைத்தல் தகுமோ என்று ஞாயிற்றின் ஒளியை யாருமே மறைக்க முடியாது. அது போல தான் உன்மேல் எழுந்த பழிச்சொல்லையும் மறைக்க முடியாது என தலைவி தலைவனிடம் கூறுவாதைக் காண முடிகிறது. அதாவது, ஞாயிற்றின் ஒளியை யாருமே மறைக்க முடியாது. அது போல நீ பரத்தையரோடு புனலாடியதை தன்னிடம் மறைக்க முடியாது என தலைவி கூறுவதை அறிய முடிகிறது.

தலைவி மலையை வாழ்த்துதல்

தலைவி தன்னைத் தன் காதலனுக்குக் கொடுக்க மறுத்தல் கூடும் என்று அஞ்சியும், அவர்களின் இற்செறிப்பைப் பெறாமலும், தலைவனோடு தலைவி உடன்போக்கில் ஈடுபட்டான். பின்பு மீண்டு தன் ஊருக்கு வந்த போது, இடைச்சுரத்தில் நடந்தது என்ன என்று தோழி கேட்க அதற்கு தலைவி பதில் கூறுகிறாள். இதனை,

"அறஞ்சாலியரோ அரஞ்சாலியரோ
வறனுண்டாயிலும் அறஞ்சாலியரோ
வாள்வனப் புற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறிந்த குன்றே"

(ஐங்குறுநூறு.பா.எண் 312)

இப்பாடலின் வாயிலாக சுட்டுகிறார். ஒளியால் அழகு எய்திய அருவிகளைக் கொண்டதும், தன் பகைவரைக் கொன்றழிக்கும் பேராற்றல் படைத்த என் கரதலனை, எம்மைப்பின் தொடர்ந்து வந்த என் ஐயன்மார் பார்வையிலிருந்து காப்பாற்ற தலைவனை மறைத்தலும் ஆகிய மலை அறத்தால் நிரம்புவதாக என்று உலகமெல்லாம் வறண்டு போகும் நிலை வந்தாலும் நீ மட்டும் அறத்தால் நிரம்புவதாக, என்று உலகமெல்லாம் வறண்டு போகும் நிலை வந்தாலும் நீ மட்டும் அறத்தால் நிரம்ப வேண்டும் என வாழ்த்தினாள். அதாவது தலைவன் தலைவியை பின் தொடர்ந்து வந்த தலைவியின் ஐயன்மார் கண்ணில் தலைவன் பட்டால் இருவருக்கும் இடையே பகை ஏற்படுமே என நினைத்த போது,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

தலைவன் மலையில் மறைந்து கொண்டதால் இருவருக்கும் இடையே ஏற்படக் கூடிய மோதலை அம்மலையானது நீக்கியது. ஆதலால் அம்மலையின் மீது மிகுந்த அன்பு கொண்டு தன் நன்றிப் பெருக்கால் தலைவி அம்மலையை வாள் வனப்புற்ற அருவிக் கோள்வல் என்னை மறிந்த குன்று என வாழ்த்துதை அறிய முடிகிறது.

பருவம் கண்டு தலைவி உரைப்பது

தலைவன் மன்னனுக்கு போர் தொடுக்க துணையாகப் பிரிந்த பொழுது, கார்ப்பருவத்திற்கு முன் வருவதாகத் தலைவன் சொல்லிக் சென்றான். அப்பருவம் வரவிற்காகத் தலைவி காத்திருக்கையில், பாசறையிலிருந்து திரும்பி வந்த சிலர், தலைவன் பாசறையின் கண் உறைதலை கூறினர். அதைக்கேட்ட தலைவி தன் ஆற்றாமை தோன்றக் கூறுகிறாள். இதனை,

"கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர் தரு விருந்தின் தவிர்குதல்யாவது
மாற்று அரும் தானை நோக்கி
ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே"

(ஐங்குறுநூறு. பா. எண் 451)

என்று இப்பாடலில் தலைவன் கார்ப்பருவத்தில் தன்னொடு இருப்பான் என்று எதிர் பார்த்திருந்தாள் தலைவி, மன்னன் மேலும் பாசறையில் நீடித்துறைவான் என்பதை தெரிந்து கொண்ட தலைவி, தன் கணவன் தான் குறித்தவாறு வருவதற்கு வாய்ப்பில்லை என்று கருதினாள். எனவே அவர் தேரூர்ந்து வந்து எனக்கு விருந்தாகத் தங்குவது எவ்வாறு எனக் கேட்டுத் தன் ஏமாற்றத்தைப் புலப்படுத்தினாள். கடமை முற்றும் முடிவுறாத நிலையில் பாசறையில் நீடித்திருத்தல் வேந்தனது தொழிலாதலின், அரசனை அங்கு தனியாக விடுத்து தான் மட்டும் வருதல் இயலாது என நினைத்து தன் கணவன் வர முடியவில்லை என்றாள். இதனை தவிர்த்து வேந்தன் பாசறையில் உள்ள பொழுது, தலைவன் தன் இல்லத்தில் தங்குதல், தன்படை பகைவரால் வெல்ல முடியாத அளவுக்கு மனவெழுச்சி மிக்க மறவர்களைக் கொண்டாலும், வெல்வது உறுதியெனக் கருதிப் பாசறையில் தங்கினான் என்பதை தலைவி வாயிலாக கூறுவதைக் காணமுடிகிறது.

முடிவுரை

சங்க அகப்பாடல்களில் மாந்தர்களின் கூற்றுக்களில் களவுக்குரிய மாந்தர்கள் கற்புக்குறிய மாந்தர்கள் என இருவகையாகப் பிரித்து இவர்கள் யார் யாரிடம் எம்மொழியில் பேச வேண்டும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

பேசும் சூழல்கள் குறித்தும் தொல்காப்பியர் கூறிச் சென்றுள்ளதையும், ஒவ்வொரு திணையிலும் தலைவி தலைவனிடம் பேசும் சூழல்களையும், தலைவி தன் ஆற்றாமையை கூறும் நிலையினையும் விளக்கிக் கூறுவதைக் காணமுடிகிறது.

துணை நூல் பட்டியல்

1.சோமசுந்தரனார், ஐங்குறுநூறு மூலமும் உரையும்,
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

2.மாணிக்கனார்.அ. (2.ஆ) ஐங்குறுநூறு மூலமும் உரையும்,
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

3.தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

4.தமிழண்ணல், திருக்குறள் மூலமும் உரையும்,
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.